# புதுச்சேரி சுற்றுச்சூழல் கழகம்

## Puducherry Environment Council (PUDENCO)

மனை எண். 106, எம். ஜி. ஆர். நகர், 100 அடி சாலை. புதுச்சேரி - 605 004

தொலைபேசி: 91-413-2266741, 9486086938

மின்னஞ்சல்: pudenco@gmail.com


# புதுவைக்கான பசுமை தேர்தல் அறிக்கை 2011

## விவசாயம்:

- விவசாய நிலங்கள், தொழிற்சாலைகளுக்காகவும், வீட்டு மனைகளுக்காகவும், கல்வி நிலையங்களுக்காகவும் விற்பது உரிய சட்டங்கள் மூலம் தடை செய்யப்படவேண்டும்.
- இரசாயன உரங்களை தயாரிப்பது, விற்பது, பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும்.
- கடன், மானியம், ஊக்கத்தொகை மூலம் இயற்கை விவசாயம் மேம்படுத்தப்பட வேண்டும்.
- வீட்டுத்தோட்டம் மற்றும் கூரைத்தோட்டம் போன்றவை ஊக்கத்தொகை மூலம் மேம்படுத்தப்பட வேண்டும்.

## கடற்கரை:

- புதுச்சேரி அரசின் அலட்சியத்தால் அரிக்கப்பட்டுவிட்ட கடற்கரையை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல் எளிதில் பாதிக்கப்படும் பகுதியாக கடற்கரை விளங்குவதால், கடற்கரை பகுதிகளில் எந்த விதமான வளர்ச்சி திட்டங்களும் செயல்படுத்தப்படக் கூடாது.
- கடலோர மக்களின் வாழ்வாதாரத்திற்கும், கடற்கரையின் சுற்றுச்சூழலுக்கும் பேரழிவை ஏற்படுத்தவல்ல கடற்கரை ஒழுங்கு முறை அறிவிப்பாணை 2011-ஐ திரும்பப் பெற்று, கடற்கரை ஒழுங்கு முறை அறிவிப்பாணை 1991-ஐ அதன் மூல வடிவில் செயல்படுத்த மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.
- தேங்காய்திட்டு மற்றும் மூர்த்திக்குப்பம் துறைமுகப்பணிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
- திருப்பூர் சாயக்கழிவுகள் புதுவையின் கடலுக்கு கொண்டு வருவதற்கான திட்டங்கள் உடனடியாக கைவிடப்படவேண்டும்.
- காரைக்கால் துறைமுகம் மேலும் விரிவுபடுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.
- இத்துறைமுகத்தை மேலாண்மைசெய்யும் தனியார் நிறுவனமே, காரைக்காலின் கடற்கரையை வளப்படுத்துமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்.
- உப்பனார் கால்வாய் மற்றும் பெரிய கால்வாய் நீர் 100% சுத்திகரிக்கப்பட்ட பின்னரே கடலில் விட வேண்டும்.
- சுத்திகரிக்கப்படாத எவ்வித நீரையும் கடலில் கலப்பது தடை செய்யப்பட வேண்டும்.
- மீறல்கள் முறையாக கண்காணிக்கப்பட்டு, மீறுவோருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

## நகரம்:

- பொது போக்குவரத்து சேவைகள் மேம்படுத்தப்பட்டு, சாலைகள், நடைபாதைகள் ஆகியவை மேம்படுத்தப்பட வேண்டும். நடைபாதைகளில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட வேண்டும்.
- இப்போதுள்ள சாலைகள் மற்றும் எதிர்காலத்தில் போடப்படவுள்ள சாலைகள் அனைத்திலும் மிதிவண்டிகளுக்கு தனி பாதைகள் ஒதுக்கப்பட வேண்டும்.
- புகையை கக்கும் இப்போதைய பகிர்வுந்துகளுக்கு (ஷேர் ஆட்டோ / டெம்போ) பதிலாக, மின்சாரம் மற்றும் சூரிய ஒளியில் இயங்கக் கூடிய பகிர்வுந்துகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- ஞெகிழிக்கு (பிளாஸ்டிக்) விதித்தத் தடை முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும்;
- சாலையோரங்களில் குப்பைகளைக் கொட்டுவது முழுமையாக தடைசெய்யப்பட வேண்டும்.
- மண் நிரப்பாமல் கழிவுநீர் குட்டைகளாகவும், குப்பை மேடுகளாகவும் மாறியுள்ள காலிமனைகள் உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- நகரின் மத்தியில் அமைந்துள்ள பெரிய கால்வாய் தவறாமல். ஒழுங்காக சுத்தம் செய்யப்பட்டு, எப்போதும் நீர் தேங்காமல் பராமரிக்கப்பட வேண்டும்.
- ஹைமாஸ் விளக்குகள், சோடியம் வேப்பர் விளக்குகளை நிறுவுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இப்போதுள்ள விளக்குகள் பழுதாகும்போது, சாதாரண விளக்குகளையே பொருத்த வேண்டும்.
- ஒரு முழுமையான சாலை வடிவம் (பொருள்கள், உயரம், தடிமன், போன்றவை) உருவாக்கப்பட்டு, எப்போது சாலை போடும்போதும் இதுவே பின்பற்றப்பட வேண்டும்.

## தொழிற்சாலைகள்:

- நீரை அதிகமாக பயன்படுத்தும் தொழிற்சாலைகளையும், நீர், நிலம், காற்று ஆகியவற்றை மாசு படுத்தும் தொழிற்சாலைகளையும், இரசாயன தொழிற்சாலைகளையும் உடனடியாக மூட வேண்டும்;
- இதில் வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு, சணல் பை, சூரிய ஒளி மின்சாரம் தொடர்பான தொழில்கள் தொடங்க பயிற்சி மற்றும் கடனுதவி அளிக்க வேண்டும்.
- குடிசைதொழில்களை அரசு ஊக்குவிக்க வேண்டும். உள்ளூர் நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருக்கப்பட வேண்டும்.

## நீர்:

- பொது குடிநீரின் தரம் அடிக்கடி பரிசோதனை செய்யப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட வேண்டும்.
- பொது குழாய்களில் குடிநீர் வீணாகுவது தடுக்கப்பட்டு, தவறு புரிவோர் தண்டிக்கப்பட வேண்டும்.
- நீராதாரங்களில் குப்பைகள் கொட்டுவது, கழிவு நீரை விடுவது, ஆக்கிரமித்து கட்டிடங்கள் கட்டுவது போன்ற செயல்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.
- ஏரி புனரமைப்புத் திட்டத்தின் மூலமாக புனரமைக்கப்பட்ட ஏரிகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். ஏரி பயனாளிகள் சங்கம் புனரமைக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட வேண்டும். இதற்கு முழுமையான மாநில நீர்ப்பாசன மேலாண்மைசட்டமும் கொண்டுவரப்பட வேண்டும்.
- அனைத்து வீடுகள், அரசு அலுவலகங்கள், திருமண மண்டபங்கள், கல்வி நிறுவனங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டாயமாக்கப்பட வேண்டும்.
- அனைத்து நீராதரங்களும் பாதுகாக்கப்பட வேண்டும், கணக்கனேரியை கழிவு நீர் சுத்திகரிப்பு மையமாக மாற்றும் முயற்சியை கைவிட வேண்டும்.
- பாகூர் ஏரியும், ஊசுட்டேரியும் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளாக அறிவிக்கப்பட வேண்டும்.

## வனம்:

- மண் நிரப்பாமல் உள்ள காலிமனைகள் தற்காலிகமாக வனத்துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, குறுகியகால பயிர்கள் மற்றும் மரங்கள் மூலம் சமூகக் காடுகள் அமைக்கப்பட வேண்டும்.
- கோயில் காடுகள் அழிந்து வருவதும், ஆக்கிரமிக்கப்படுவதும் தடுக்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.
- விவசாயம் என்பது மிக சிரமமான தொழிலாக மாறி வருவதால், காட்டுப்பண்ணை திட்டம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- இனிவரும் அனைத்து குடியிருப்பு பகுதிகளிலும் குறைந்த பட்ச பசுமைப்பகுதி இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதை குடியிருப்போர் நல சங்கங்களின் பங்கேற்போடு செயலாக்க வேண்டும்.

## நிர்வாகம்:

- பொதுத்துறை அலுவர்களையும், குடிமைசமூக உறுப்பினர்களையும், பொதுமக்களையும் கொண்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குழு ஏற்படுத்தி, புதுவையின் சுற்றுச்சூழல் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு, ஆண்டறிக்கை வெளியிடப்பட வேண்டும்.
- புதுவையில் தொடங்கப்படும் எந்த திட்டமாக இருந்தாலும், அதில் சுற்றுச்சூழல் மேலாண்மையுக்தியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- அரசு, தனியார் அனைத்து பள்ளிகளிலும் சுற்றுச்சூழலை பாடமாக அறிமுகப்படுத்த வேண்டும்.
- அனைத்து ஊடகங்களும் புதுவையின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த நேரம் மற்றும் இடம் ஒதுக்க வேண்டும்.

---

**✢ பூவுலகின் நண்பர்கள்**
**✢ செம்படுகை நன்னீரகம்**
**✢ புதுச்சேரி மக்கள் பாதுகாப்பு கூட்டியக்கம்**
**✢ இந்திய சமூக செயல்பாட்டுப் பேரவை**
**✢ பாண்டி கேன்**
**✢ மக்கள் நாடி**
**✢ புதுச்சேரி அறிவியல் இயக்கம்**
**✢ சமூக செயல்பாட்டு இயக்கம்**

ஊக்கம்: **Public Affairs Centre**